03.04.2024

O.S.No.194/2018

வா.சா. 1.திருமதி.பாண்டியம்மாள் க.பெ. சேவுக பெருமாள்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

தாவா சொத்தில் 1ம்பிரதிவாதி கூரை வேய்ந்து 10 ஆண்டுகள் இருக்குமா என்றால் சரியல்ல, அவர் கூரை எதுவும் வேயவில்லை. அதேபோல் தாவாசொத்தில் குடிநீர் பைப் இணைப்பு பெற்று 15 ஆண்டுகள் இருக்கும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-1 பட்டாவில் மொத்த விஸ்தீரணம் 0.01.75.0 ஏர்ஸ் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா இந்த வழக்கிற்காக தற்போது உண்மை நகல் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக பலமுறை எங்களுக்கிடையே சமரசம் பேசப்பட்டது என்றால் சரியல்ல. நான் கருங்காலக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பிரதிவாதியின் பத்திரபதிவு செல்லாது என புகார் எதுவும் கொடுத்தேன் என்றால் புகார் கொடுத்துள்ளோம், அவ்வாறான புகார் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவாசொத்திற்கான பழைய சர்வே எண், புதிய சர்வே எண் என்ன என்று எனக்கு தெரியாது என்றால் சர்வே எண்.4/4/4 என்று நினைக்கிறேன், எனக்கு சரியாக விவரம் தெரியாது. தாவாசொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது என்பதால் தாவா வழக்கினை பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அதே போல் சேக்கிபட்டி ஊராட்சி வரி ரசிது எண் எனக்கு தெரியாது என்றால் சரிதான், ஆனால் நான் ரசிது பெற்றுள்ளேன். தாவா சொத்து எனது தகப்பனாருக்கு அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்து கட்டி கொடுக்கப்பட்ட வீடு என்றால் சரிதான். எனது தகப்பனார் தாவாசொத்தினை 20.07.1994ம் தேதியன்று பிரதிவாதியின் தகப்பனாருக்கு வெண்ணிலை கிரையம் கொடுத்துள்ளார் என்பதால், அது முதல் பிரதிவாதிகள்தான் தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து கிஸ்தி கட்டி, மின் கட்டணம் செலுத்தி, குடிநீர் இணைப்பு பெற்று அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதியை மறைத்து இந்த வழக்கினை பொய்யாக தாக்கல் செய்து, வீண் வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிகளுடையது என்பதால் தாவாவில் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.